**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) 01 ஆம் கட்டத்தின் - 2015**

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) 01 ஆம் கட்டத்தின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் தற்போது யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் (ஜேஐசீஏ) என அழைக்கப்படுகின்ற சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பான் வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2007 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்-பி 89 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலை குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைக்கின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய பிரதேசங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 26,263 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 29,182 மில்லியனாக உள்ளதுடன் அதில் யப்பானிய யென் 21,074 மில்லியனிற்குச் சமமான ரூபா 18,966 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2009 திசெம்பர் 01 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2013 மே 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டச் செயற்பாடுகள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகள்

வெளிச்சுற்று வட்ட செயற்திட்ட கட்டம் II மற்றும் கட்டம் III உடன் செயற்திட்டத்தினால் பேணப்பட்டிருந்த நடைமுறைக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 676.08 மில்லியன் மற்றும் ரூபா 984.91 மில்லியன் செலுத்தவேண்டிய மீதிகள் செயற்திட்டத்துடன் வெளிச்சுற்று வட்ட அதிவேகப்பாதை செயற்திட்ட கட்டம் II மற்றும் கட்டம் III இனால் பேணப்பட்டிருந்த நடைமுறைக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 552.07 மில்லியன் மற்றும் ரூபா 1,984.23 மில்லியன் மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2003 பெப்ரவரி 27 ஆந் திகதிய 250 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அனைத்துச் சொத்துக்களும் இருப்புக்களும் செயற்திட்டம் பூரணப்படுத்தப்படுகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்படுகின்றமையினை உறுதிப்படுத்துதல் செயற்திட்டப் பணிப்பாளரின் பொறுப்பாகும். மேலும், ஒரு செயற்திட்டத்திலிருந்து மற்றுமோர் செயற்திட்டத்திற்கு சொத்துக்களை கையளிக்கையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொது முகாமையாளரின் முன்கூட்டிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்புடைய தரப்பின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன.

**2.2.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இல்லாமை**

ஒப்பந்தகாரர் ஊடாக செயற்திட்டத்தினால் ரூபா 44.03 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்த 14 மேடாட்டார் வாகனங்களின் பரிமாற்ற திகதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் போன்ற விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கை களில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜேபிவை மில். | ரூபா மில். | ரூபா மில். | ஜேபிவை மில். | ரூபா மில். | ஜேபிவை மில். | ரூபா மில். |
| ஜேஐசீஏ | 21,074 | 18,966 | 2,231 | 1,858 | 2,175 | 21,923 | 27,785 |
| ஜீஓஎஸ்எல் | 8,108 | 7,297 | 85 | 90 | 106 | 5,035 | 6,345 |
| மொத்தம் | **29,182** | **26,263** | **2,316** | **1,948** | **2,281** | **26,958** | **34,130** |

**3.2 பௌதீக செயலாற்றல்**

2009 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த கடவத்தை முதல் கடுவெல வரையிலான அதிவேகப் பாதையின் கட்டம் - 01 இன் நிர்மாண வேலைகள் ரூபா 1,428.83 மில்லியன் கிரயத்தில் பூரணப்படுத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக 2014 மார்ச் 08 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டது. இருப்பினும், செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் செயற்பாடுகள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தொடரப்பட்டிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிவேகப் பாதையின் நிர்மாண வேலைகளின் பரப்பெல்லை அடிக்கடி மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, ரூபா 4,662 மில்லியன் பெறுமதியான சிவில் வேலைகள் 170 மாற்றல் கட்டளைகளின் ஊடாக ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட வேலைகளின் பரப்பெல்லை அகற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 80.59 மில்லியன் பெறுமதியான மேலதிக வேலைகள் 06 ஏனைய மாற்றல் கட்டளைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பின்வரும் மேலதிக அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதுருகிரியவிலுள்ள இடமாற்றத்தினதும் கடுவெலவிலுள்ள நிரந்தர இடமாற்றதினதும் நிர்மாணம் பிரதான ஒப்பந்தத்திற்கான மாற்றங்களாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், ஒரே ஒப்பந்த தாரருக்கு முறையே ரூபா 2,077 மில்லியன் மற்றும் ரூபா 475 மில்லியன் பெறுமதிக்கு இருவேறுபட்ட ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. செயற்திட்ட பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி, முன் அங்கீகாரங்களின்றி முறையே 29 மற்றும் 23 சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட இடமாற்ற நிர்மாண வேலைகளிற்கு பல்வேறுபட்ட பிரதான மாற்றங்களை ஒப்பந்ததாரர் மேற்கொண்டிருந்தார்.

(ii) கடுவெல கொத்தலாவலயிலுள்ள இடமாற்றதின் நிர்மாண வேலைகளை கட்டம் II இன் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், நிரந்தர இடமாற்ற நிர்மாணம் தாமதமடைந்திருந்தமை காரணமாக செயற்திட்டத்தின் கீழ் ரூபா 126.34 மில்லியன் கிரயத்தில் தற்காலிக இடமாற்றம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர், தற்காலிக இடமாற்றம் ரூபா 10.10 மில்லியன் கிரயத்தில் அகற்றப்பட்டிருந்தது.

(iii) ஒப ஒப்பந்ததாரர் மூலம் ரூபா 12.29 மில்லியன் கிரயத்தில் மாற்றல் கட்டளைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த நடைபாதை நிர்மாணம் மற்றும் அதுருகிரிய இடமாற்றத்திற்கு எஸ்பல்ட் இடுவதற்கான மேலதிக வேலைகளிற்காக ஒப்பந்த நிபந்தனைகளின் 59.1 ஆம் சரத்தின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்தான இணக்கப்பாடு ஒப்பந்த தாரரால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிவேகப் பாதையின் நிர்மாண வேலைகள் மீதான தர அளவீடுகளுடன் இணங்குதல் தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(i) நிர்மாண ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பிரகாரம், வீதி நிர்மாண நோக்கத்திற்கான தர உத்தரவாத முறைமையுடன் ஒப்பந்ததாரர் இணங்கியொழுகுதல் வேண்டுமாகையால், தர உத்தரவாத பதவியணியினர் திட்டமிடப்பட்டு ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்ததாரர் மேற்படி தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகாதிருந்தமையால் தர உத்தரவாத நோக்கத்திற்காக செயற்திட்டத்தின் மதியுரைஞரால் மேலதிக பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மாற்றல் கட்டளைகளின் ஊடாக ரூபா 6.91 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது.

(ii) தோண்டும் கவசம் (pile caps), இறங்குதளம் (piers) மற்றும் ‘‘எபட்மென்ட்ஸ்’’ (abutments) போன்ற பேரளவிலான கொங்ரீட் தொடர்பில் வெப்பக் கட்டுப்பாட்டிற்கான பொறிமுறையொன்று மூல அளவுச் சிட்டைகளில் முறைப்படி விதந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், வெப்பக் கட்டுப்பாட்டிற்கான பொறிமுறையொன்றை சேர்த்துக் கொள்வதற்காகவும் தர நியமங்களுடன் இணங்குவதற்காகவும் மாற்றல் கட்டளையொன்றின் கீழ் ரூபா 49.88 மில்லியன் மேலதிகக் கிரயம் செய்யப்பட்டிருந்தது.

(iii) அதிவேகப் பாதையின் பேணுதல் வேலைகளின் குறிப்பிடத்தக்க தவறுகள் காரணமாக 2012 யூன் முதல் 2014 செப்தெம்பர் வரை மதியுரைஞரினால் 05 உறுதிப்பாட்டு உற்பத்திப்பொருள் அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இனங்காணப்பட்ட குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித சான்றுகளும் 2015 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை.

(இ) ஒப்பந்த நிபந்தனைகளின் 62.2 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ரூபா 200 மில்லியன் பெறுமதிக்கு மேற்பட்ட இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மதிப்பீட்டு நோக்கங்களிற்காக கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 200 மில்லியன் பெறுமதிக்கு மேற்படாத இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் 2015 திசெம்பர் 31 வரை 15 சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

### 3.4 வழமைக்கு மாற்றமான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான ஒப்பந்தத்துடன் தொடர்பற்ற மாகாண வீதிகளை புனரமைத்தல், வெளித்தரப்பினர்களிற்குச் சொந்தமான வளவுகளில் பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற வேலைகள் ரூபா 22.78 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) அதிவேகப் பாதையின் சுற்றாடல் கட்டுப்பாட்டு நோக்கங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 75 மில்லியன் தொகையிலிருந்து வெளித்தரப்பினர்களுடைய ஆதனங்களிற்கான சேதங்கள் தொடர்பில் ரூபா 34.11 மில்லியன் தொகையான செலுத்தவேண்டிய இழப்பீடு தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.5 காணிகளைக் கையேற்றல் மற்றும் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகள்

இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக 324.17 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட கடுவெலயில் உள்ள காணி 2009 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தினால் ரூபா 71.82 மில்லியன் கிரயத்தில் சுவீகரிக்கப்பட்டு ரூபா 23.92 மில்லியன் கிரயத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இக் காணி 21 துண்டுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 08 துண்டுகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் வெளித்தரப்பினர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன.

### 3.6 செயற்திட்டச் செயற்பாடுகளை நிறைவுசெய்தல்

செயற்திட்டச் செயற்பாடுகள் 2015 ஏப்ரல் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 யூன் மாதத்திலிருந்து அதிவேகப் பாதையின் செயற்பாடுகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், மூடிவிடுதற்கான செயற்திட்டக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.